[1974 சனவரி 25

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிவிடென்ட் கொடுத்து இருக்கின்ற மில்கள் சௌத் இந்தியா, வடார்க்காடு, சேலம் நூற்பு ஆலைகள். அதே போல் 1972-73-ல் சேலம், திருவில்லிப்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கொடுத்து இருக்கிறோம்.

*170 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கைப் பகுதியில் நூற்பாலை ஒன்று துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிவகங்கையில் தனியார் துறையில் நூற்பாலை ஒன்றைத் துவக்க மத்திய அரசு ஒரு உரிமம் வழங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த நூற்பாலை எப்போது துவங்கப்படும், இப்போது எந்த அளவில் ஆக்கப் பணி இருந்து கொண்டிருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவில் தொடங்கப்படும்.

விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழிற்சாலை

*171 வினு—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் விண்ணமங்கலம் அரசு தோல் பதனிடும் ஆலை இதுவரை ஈட்டிய லாபம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-72-ம் ஆண்டு முடிய நட்டம் போக கிடைத்த லாபம் ரூபாய் 1.14 இலட்சம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அந்த விண்ணமங்கலம் தோல் பதனிடும் ஆலை நல்ல லாபம் பெற வாய்ப்பு பெற்று இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதை விரிவுபடுத்த செயற் குறிப்பு இருக்கிறதா ? மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கிற தோல் கட்டுப்பாடு கொள்கையின் காரணமாக இது போன்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், தனியாரும் மிகவும் பாதிக்கப்